## சுருக்கம்

ஜவுளித் தொழில் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் அப்பூங்காக்களின் உட்கட்டமைப்பிற்கான செலவினத் தொகையில் 50 சதவிகிதம் அளவிற்கு ரூ.2.50 கோடிக்கு மிகாமல் மாநில அரசின் மானியம் வழங்குதல் – நிர்வாக ஒப்புதல் வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை**

அரசாணை (நிலை) எண். 195

நாள்: 30. 12. 2015
மன்மத, மார்கழி 14
திருவள்ளுவர் ஆண்டு 2046

**படிக்கவும்:**

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடித எண்:31736 /2015/பி 3, நாள் 12.10.2015.

******

**ஆணை:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 01.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றாக கீழ்காணும் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது:-

"தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி மையங்களில் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா (Mini textile Park) அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு மானியமாக 50 விழுக்காடு தொகை அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 கோடி அளவிற்கு உட்கட்டமைப்பு ஏற்படுத்த மானியம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. இத்தகைய சிறிய ஜவுளிப் பூங்காவின் (Mini Textile Park) அமைப்பு பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும்:-

1) நிலம்

2) உட்கட்டமைப்பு வசதிகள் (சாலை வசதி, சுற்றுசுவர், கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல், நீர் விநியோகம், தெரு விளக்கு அமைத்தல், மின்சார வசதி (including captive power plant) மற்றும் கழிவு நீரை சுத்திகரிக்கும் நிலையம், தொலை தொடர்பு வசதி போன்றவைகள்)

3) ஆய்வுக்கூடம், வடிவமைப்பு மையம், பயிற்சி மையம், வியாபார மையம், கிடங்கு வசதி, மூலப் பொருட்கள் மையம், குழந்தைகள் காப்பகம், உணவகம், பணியாளர்கள் விடுதி, அலுவலகம் மற்றும் இதர இனங்கள்.

4) உற்பத்தி தொடர்பான தொழிற்கூடங்கள்

5) இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்

சிறிய ஜவுளிப் பூங்காவிற்கான திட்ட மதிப்பீடு என்பது மேற்குறிப்பிட்ட 2, மற்றும் 3 இனங்கள் ஆகும்; எனவே, அவ்விரு இனங்கள் மட்டுமே அரசின் மானியத்தை பெறத் தகுதியான முதலீடாகக் கருதப்படும்.

4. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, தமிழ்நாட்டில் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்களை (Mini Textile Parks) அமைக்கவும், அச்சிறிய ஜவுளிப்பூங்காக்களில் உட்கட்டமைப்பிற்கான செலவினத் தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.2.50 கோடி இதில் எது குறைவோ அதனை மாநில அரசு மானியமாக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது:-

1) ஒவ்வொரு சிறிய ஜவுளிப் பூங்காவும் ஒரு சிறப்பு நோக்க முகமையினை (Special Purpose Vehicle) பதிவு செய்திருக்க வேண்டும்.

2) முதலீட்டாளர்கள் சிறப்பு நோக்க முகமையில் அங்கம் வகிக்கவும் அதற்கான தனது பங்கினை அளிக்கவும் எழுத்து மூலமாக விருப்பம் தெரிவித்தல் வேண்டும்.

3) இவ்வாறு அமையவுள்ள ஜவுளிப்பூங்கா குறைந்த பட்சம் 10 தொழிற்கூடங்களுடன் குறைந்தபட்சமாக 10 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும்.

4) நிலமானது சிறப்பு நோக்க முகமை பெயரில் பதிவு செய்திருக்க வேண்டும்.

5) நிலம், தொழிற்சாலை கட்டிடம், இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்கு செய்யப்படும் முதலீடானது உட்கட்டமைப்பு வசதிக்கு செலவிடப்படும் முதலீட்டை விட இரண்டு மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

6) சிறப்பு நோக்க முகமையில் (SPV) அரசின் பிரதிநிதி ஒருவர் இடம்பெற்றிருக்க வேண்டும்.

7) பூங்காவின் பெயரில் தேசிய வங்கியில் கணக்கு (escrow account) தொடங்கப்பட்டிருக்க வேண்டும்.

8) மேற்காணும் மானியம் மூன்று தவணைகளில் விடுவிக்கப்படும்.

9) மேலும் சிறப்பு நோக்க முகமை (SPV) ஒவ்வொரு முறையும் மானியம் விடுவிக்க கோரிக்கை சமர்ப்பிக்கும்போது தொடர்புடைய ஆவணங்கள், இரசீதுகள், ஒப்பந்த பத்திரங்கள் உடன் சமர்ப்பிக்க வேண்டும்.

10) மாநில அரசு விடுவிக்கும் மானியத்திற்கு சிறப்பு நோக்க முகமை தனியான கணக்கினை மேற்கொள்ள வேண்டும். இக்கணக்கானது அரசின் தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்படும்.

11) திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் ஜவுளிப்பூங்காவின் முன்னேற்றம் குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தொடர்ந்து கண்காணித்து வருவார்.

12) திட்டப்பணியினை முடிக்கும் முன்பே திட்டப் பணியிலிருந்து எந்த சிறப்பு நோக்க முகமை (SPV) யாவது விலக நேரிடின் அந்த காலகட்டம் வரை பெற்ற மாநில அரசு மானியத்தை அதற்கான வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டும். வட்டி சதவிகிதத்தை திட்ட அங்கீகாரக் குழு நிர்ணயிக்கும்.

5. சிறிய ஜவுளிப்பூங்கா அமைக்க பெறப்படும் பிரேரணைகளைத் திட்ட இனங்கள், திட்டத்தின் நிலைக்கும் தன்மை, திட்டம் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள், திட்டத்தின் காலஅளவு (Project component, viability, feasibility and time line of each project), ஆகிய கோணங்களில் ஆய்வு செய்து பூங்கா அமைக்க தகுதி இருப்பின் பிரேரணையை உரிய தகவல்களுடன் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு வரும் பிரேரணைகளைத் தகுந்த பரிசீலனைக்குப் பின்னர் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், திட்ட ஆய்வு மற்றும் அங்கீகாரக் குழுவிற்கு (Project Scrutiny and Approval Committee) ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பார். இயக்குநர் தலைமையிலான அக்குழுவானது, திட்ட இனங்கள், நிலைக்கும் தன்மை, சாத்தியக்கூறுகள், திட்டத்தின் காலஅளவு ஆகியவைகளை நன்கு ஆய்வு செய்து, தகுதியான பிரேரணைகளை அங்கீகரிக்கும்.

6. மேற்காணும் நிபந்தனைகளை இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் அனைத்துச் சிறு ஜவுளிப் பூங்காக்கள் சார்ந்தும் பின்பற்றுதல் வேண்டும்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.69867/ நிதி (தொழில்கள்) துறை / 2015, நாள்.28.12.2015–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், குறளகம், சென்னை–108.
சம்பளம் (ம) கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர் (A&E), சென்னை –18 (பெயரில்)
மாநில கணக்காயர் (CA), சென்னை –18 (பெயரில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை –9.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.